**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ம் நாள் செவ்வாய்கிழமை

**IA No.02/2024**

**In**

**O.S No.77/2024**

சுமதி ..... **மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

1) நாகராஜன்,

2) கோவிந்தராஜுலு,

3) பாலகிருஷ்ணன், ..... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.செந்தில்குமார்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 39 விதி 1 & 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த மனுவானது தாவா கோவிலான ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவிலின் பரம்பரை அறங்காவலராக மனுதாரர் பணி செய்வதை 1,2 பிரதிவாதிகளோ, அவர் வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ, வாரிசுகளோ தடை, தகராறு ஏதும் செய்யக் கூடாது என இடைக்கால

தடையானை பரிகாரம் வழங்கி உத்தரவிடக் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுகா, ஆடலைகால பைரவபுரத்தில் உள்ள மனு/தாவா சொத்தில் கடந்த 1973-ஆம் ஆண்டு மனுதாரர் தகப்பனார் நா.கரு.மாணிக்கக்கோனார் என்பவரால் ஸ்ரீ மாணிக்க வினாயகர் கோவிலானது அவரது சொந்த செலவில் மனு/தாவா இடத்தில் கட்டப்பட்டதாகும். மனு/தாவா கோவில் கட்டப்பட்டது முதல் மனு/தாவா கோவிலின் முழு நிர்வாகத்தினையும் அவரது தகப்பனார் மாணிக்க கோனார் கோவில் அறங்காவலராக இருந்து பார்த்து வந்தார். மனு/தாவா கோவிலில் ஸ்ரீ மாணிக்க வினாயகர் சுவாமி மூலவராக உள்ளார். அவருக்கு தினமும் ஒரு வேளை பூஜை மற்றும் அபிஷேக, ஆராதனைகள் செய்வதற்காக மனுதாரரது தகப்பனார் மாணிக்க கோனார் கடந்த 1973 முதல் 1977 வரை உத்தன்டி என்பவரை நியமனம் செய்து அவருக்கு வருடத்திற்கு 4 மூட்டை நெல் வழங்கியுள்ளார். அதன் பின்பு 1977 முதல் 1992 வரை உள்ள காலத்தில் கீரமங்கலம் ஐய்யர் அர்ச்சகராக இருந்தார். அவருக்கும் தினசரி படி மனுதாரரது தகப்பனர் வழங்கி வந்தார். அதன் பின்பு 1992 முதல் 2002 வரை பெரியதம்பி என்பவர் அர்ச்சகராக இருந்துள்ளார். அவருக்கு வருடத்திற்கு 5 மூட்டை நெல் வழங்கி வந்துள்ளார். அதன் பின்பு 2002 முதல் 2015 வரை பாண்டி என்பவர் அர்ச்சகராக இருந்து வந்துள்ளார். அவருக்கு 10 மூட்டை நெல் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு பின்னர் 2015 முதல் 2022 வரை ஐய்யப்பன் என்பவர் அர்ச்சகராக பணியாற்றியிருக்கிறார். அவருக்கு வருடத்திற்கு ரூ.5,000/-ம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்பு தற்போது வரை கருப்பையா என்பவர் அர்ச்சகராக உள்ளார். அவருக்கு வருடத்திற்கு ரூ.10,000/-வழங்கப்பட்டு வருகிறது. மனு/தாவா கோவில் 19.08.1973-ல் கும்பாபிஷேகம் செய்து கல்வெட்டும் மனுதாரரது தகப்பனார் அமைத்துள்ளார். மேலும் மனு/தாவா கோவிலுக்கு வருமானம் ஏற்படுத்தும் நோக்கில் புல எண்.134/4-ல் 91 சென்ட் 19.07.1976-ல் மனுதாரரது தகப்பனார் கிரையம் பெற்றும் அன்றைய தேதியிலேயே மனு/தாவா கோவில் பெயருக்கு கிரையம் செய்துள்ளார். மனுதாரரது தந்தை கடந்த 1998-ஆம் வருடம் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு மனு/தாவா கோவிலின் அறங்காவலர் பதவி மற்றும் முழு நிர்வாகத்தினையும் மனுதாரரது தகப்பனாரான மாணிக்க கோனாரின் மூத்த மகனான மனுதாரர் பரம்பரை அறங்கவலராக இருந்து அவரது தகப்பனார் விட்டுச் சென்ற பணியினை மேற்கொண்டுவருகிறேன். மனு/தாவா கோவிலும் மனுதாரரது தகப்பனாரின் செலவில் கட்டப்பட்டு அதன் பின்னர் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கும் மனுதாரரது தகப்பனார் மற்றும் அவரது குடும்பத்தினர்களே முக்கிய பங்காற்றியுள்ளோம். மேலும் மனு/தாவா கோவிலின் பாதுகாப்பு கருதி கடந்த 2021-ஆம் வருடம் ரூ.90,000/- வரை செலவு செய்து இரும்பு கம்பிகளால் வேலி மற்றும் கதவு போட்டு உரிய பாதுகாப்பு செய்துள்ளார். மேலும் கடந்த 28.06.2007-ஆம் வருடம் மனு/தாவா

கோவிலின் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் செய்துள்ளார்கள். அதே அவ்வாறு இருந்தால் 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதி அடியாட்கள் மூலம் மனுதாரரை வழுக்கட்டயமாக மனு தாவா கோவிலிருந்து வெளியேற்றிவிடுவதாக மிரட்டி சென்றுள்ளார்கள். தாவா கோவில் மனுதாரரது தகப்பனார் கட்டி அவரது வழியில் மனுதாரர் அறங்காவலராக இருந்து வந்தாலும் தாவா கோவில் இந்து சமய அறநிலையங்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாக தெரிவித்து வருவதால் 3,4 பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1,2 எதிர்மனுதாரர்/1,2 பிரதிவாதிகள் ஆள்பலம், அரசியல்பலம், பணபலம் படைத்தவர்கள். 1,2 எதிர்மனுதாரர்/1,2 பிரதிவாதிகளின் சட்டத்திற்கு புறம்பான செயலினை இந்த நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே தடுக்க முடியும் என்பதால் மனு கோவிலின் பரம்பரை அறங்காவலராக மனுதாரரை அறிவித்தும் 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ நான் மனு/தாவா கோவிலின் அறங்காவலராக செயல்படுவதை தடை, தகராறு செய்யக்கூடாது என நிரந்தர தடையாணை பரிகாரம் வேண்டியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் வழக்கு முடியும் வரை மனுதாரர் மாணிக்க விநாயகர் கோவிலில் பரம்பரை அறங்கவலராக பணி செய்வதை 1,2 எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவை எதிர்த்து 1,2 எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. தாவா கோவில் சொத்துக்கான பட்டா மனுதாரரால் ம.சா.ஆ.1 ஆகவும், தாவா கோவிலுக்கு 19.01.1976-ம் தேதி மனுதாரரின் தகப்பனார் மாணிக்கக்கோனார் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட இனாம் சாசனம் ம.சா.ஆ.3 ஆகவும், தாவா கோவிலுக்குண்டான சிட்டா ம.சா.ஆ.5 ஆகவும், தாவா கோவிலுக்கான மின்கட்டண ரசீது ம.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா கோவிலுக்கான மின்இணைப்பு வாதி பெயரில் உள்ளது. எனவே மேற்கண்ட ஆவணங்களை பரிசீலித்து பார்க்கும்போது தாவா கோவிலில் சுவாதீனத்திலும் நிர்வாகத்திலும் வாதிக்கு உள்ளது நிரூபணமாகியுள்ளது. வாதிகளின் மனுவை எதிர்த்து 1,2 எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரருக்கு ஆதரவாக முதல்தேற்ற வழக்கும் சூழ்நிலை இயைபும் ஏற்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-V.சிவகாமசுந்தரி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அறந்தாங்கி.

<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சி :-</u> இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

1) ம.சா.ஆ.1 – தாவா சொத்திற்கான பட்டா அசல்.

2) ம.சா.ஆ.2 – தாவா கோவிலுக்கான வரைபடம் அசல்.

3) ம.சா.ஆ.3 – 19.01.1976 ம் தேதிய தாவா கோவிலுக்கு மாணிக்கக்கோனார் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல்.

4) ம.சா.ஆ.4 – தாவா கோவிலுக்குண்டான 1973 ம் தேதிய கல்வெட்டின் ஜெராக்ஸ் நகல்.

5) ம.சா.ஆ.5 – தாவா கோவிலுக்கான 10(1) சிட்டா (பட்டா எண்.227) கணினி நகல்.

6) ம.சா.ஆ.6 – தாவா கோவிலுக்கான மின்கட்டண ரசீது அசல்.

7) ம.சா.ஆ.7 – 28.06.2007-ம் தேதிய தாவா கோவிலில் நடந்த கும்பாபிஷேக பத்திரிக்கை அசல்.

8) ம.சா.ஆ.8 – 29.04.2021-ம் தேதிய தாவா கோவிலில் நடந்த கும்பாபிஷேக பத்திரிக்கை அசல்.

9) ம.சா.ஆ.9 – 10.09.2021-ம் தேதிய ஸ்ரீமாணிக்க விநாயகருக்கு நடத்திய விநாயகர் சதுர்த்தி விழா பத்திரிக்கை அசல்.

10) ம.சா.ஆ.10 – 31.08.2022-ம் தேதிய ஸ்ரீமாணிக்க விநாயகருக்கு நடத்திய விநாயகர் சதுர்த்தி விழா பத்திரிக்கை அசல்.

11) ம.சா.ஆ.11 – 18.09.2023-ம் தேதிய ஸ்ரீமாணிக்க விநாயகருக்கு நடத்திய விநாயகர் சதுர்த்தி விழா பத்திரிக்கை அசல்.

12) ம.சா.ஆ.12 – கோவில் பூசாரிகள் கொடுத்த இரசீதுகள் அசல்.

13) ம.சா.ஆ.13 – 04.09.2021 ம் தேதிய ரூ.33,000/-க்கான ரொக்க ரசீதுகள் அசல்.

14) ம.சா.ஆ.14 – ரூ.49,000/-க்கான ரொக்க ரசீது அசல்.

15) ம.சா.ஆ.15 – 20.04.2021 ம் தேதிய ரூ.76,000/-க்கான ரொக்க ரசீது அசல்.

16) ம.சா.ஆ.16 – 25.09.2021 ம் தேதிய சமாதான கூட்ட நடவடிக்கை அசல்.

17) ம.சா.ஆ.17 – 30.06.2024-ம் தேதிய கிராம பொதுமக்களின் ஒப்புதல் கடிதம் அசல்.

18) ம.சா.ஆ.18 – 23.05.1974-ம் தேதிய ஜெனரல்பவர் பத்திரம் அசல்.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 02/2024**
**O.S.No. 77/2024**
**நாள். 08.04.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**